தமிழர் பேரவை தமது இணை அமைப்புகள் ஆண்டு முழுவதும் ஏற்பாடு செய்த அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் ஆதரவளித்தது. நிதி ஆதரவு அனுமதிக்கப்பெற்ற வகையில், $500 முதல் $1,000 வரையிலான நிதி ஆதரவு, இணை அமைப்புகளின் நிகழ்ச்சிகளுக்குக் கொடுக்கப்பட்டது. மேலும், தமிழர் பேரவை இந்திய இளையர்களுக்கு ஆதரவளிக்கும் தமது வழக்கத்தைத் தொடரும் வகையில், சிங்கப்பூத் தேசியப் பல்கலைக்கழகம், நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், சிங்கப்பூர் நிர்வாகப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் வருடாந்திர நிகழ்வுகளுக்கும் மானியம் அளித்தது.

கொவிட்-19 கிருமிப்பரவலின்போது, பல அமைப்புகள் தங்கள் வழக்கமான நிகழ்ச்சிகளைக் குறைத்துக்கொண்டனர் அல்லது சிறிய அளவில் நடத்தினர். இருப்பினும் தமிழர் பேரவை, ஏற்புடைய சூழலில், தொடர்ந்து ஆதரவளித்து வந்தது.

4 நிர்வாகம்

கொவிட்-19 கிருமிப்பரவல், அரசாங்கம் அமல்படுத்திய பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றின் காரணமாக, தமிழர் பேரவை அரசாங்க விதிமுறைகளுக்கு இணங்கி நடக்கும் நோக்கில், தமது

உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் நோக்கில் பின்வரும் நடைமுறைகளை அமல்படுத்தியது:

a) அனைத்து கூட்டங்களும் மெய்நிகர் முறையில், Zoom வழி நடத்தப்படும்
b) மேலாண்மைக் குழு உறுப்பினர்களும் முக்கிய செயலவை உறுப்பினர்களும் தேவை இருந்தால் அன்றி, தமிழர் பேரவையின் அலுவலகத்திற்கு நேரடியாகச் செல்லாதிருத்தல்
c) உறுப்பினர்களும் வருகையாளர்களும் TraceTogether செயலி மூலம் விரைவுத் தகவல் குறியீட்டை வருடுவதை உறுதிசெய்தல்
d) இயல்பு நிலையாக, நிகழ்ச்சிகள் மெய்நிகர் முறையில் நடத்தப்படவேண்டும்; நேரடி நிகழ்ச்சிகளுக்கு முறையான பாதுகாப்பு நடைமுறைகள் பின்பற்றப்படவேண்டும்

4.1 கூட்டங்கள்

2020-ஆம் ஆண்டில், கொவிட்-19 பாதுகாப்பான நடவடிக்கைகள் குறித்த சட்டத்திட்டங்களினால், தமிழர் பேரவை ஐந்து மேலாண்மைக் குழுக் கூட்டங்கள், பல நிர்வாகக் குழுக் கூட்டங்கள், திட்டப்பணிக் கூட்டங்கள் ஆகியவற்றை Zoom தளத்திலேயே நடத்தியது. மேலாண்மைக் குழுவிற்கான வருகைப் பதிவு பிற்சேர்க்கை "ஈ"-இல் காணப்பெறும்.

நிர்வாகக் குழுக் கூட்டங்கள் அவசியாமனவை. ஏனெனில், இக்கூட்டங்களில் பல்வேறு நிகழ்ச்சிகளின் ஏற்பாடு குறித்தும், நிர்வாக அலுவல்கள் குறித்தும் கலந்துபேசி முடிவெடுக்கப்பட்டன. நிர்வாகக் குழுக் கூட்டங்களில் கலந்து பேசி, முடிவெடுக்கப்பட்ட அம்சங்கள், அடுத்து வரும் மேலாண்மைக் குழுக் கூட்டங்களில் ஏற்றுகொள்ளப்பட்டன.

தனியாக, தத்தம் துணைக் குழுக்களின் தலைவர்கள் அவரவர் துணைக் குழுக்களுக்கான கூட்டங்களைச் சொந்தமாக நடத்தினர். அவை குறித்த அறிக்கைகள், மேலாண்மைக் குழுக் கூட்டங்களில் சமர்ப்பிக்கப்பட்டு, மேற்படி முடிவும் தேவையான அனுமதியும் பெறப்பட்டது.

4.2 உறுப்பினர்கள், பொதுமக்கள் ஆகியோரை ஈடுபடுத்துதல்

தமிழர் பேரவையின் இணையத்தளம் தமிழர் பேரவை, அதன் இணை அமைப்புகள், எதிர்வரும் நடவடிக்கைகள், விளம்பரப் படைப்புகள், புகைப்படத் தொகுப்புகள் முதலான பயனுள்ள தகவல்களைக் கொண்டிருந்தது.

தமிழர் பேரவை தமது Facebook பக்கம் வாயிலாக பொதுமக்களைத் தொடர்ந்து விறுவிறுப்பாக ஈடுபடுத்தி வந்தது. தமிழர் பேரவை அதன் நடவடிக்கைகள், இணை அமைப்புகளின் நடவடிக்கைகள் குறித்த அண்மைத் தகவல்களையும், தமிழர் பேரவையின் நடவடிக்கைகளுக்குத் துணைபுரிவதற்கான தொண்டூழியர்களுக்கு அழைப்பு விடுக்கவும், Facebook பக்கத்தைச் சிறப்பாகப் பயன்படுத்தி வந்துள்ளது. 8,000-க்கும் அதிகமானோர் தமிழர் பேரவையின் Facebook பக்கத்தைத் தொடர்ந்து பார்த்து வருகின்றனர்.

செலவுக் குறைப்பின் ஓர் அங்கமாக, செய்தி அறிக்கைகள் ஏதும் வெளியிடப்படவில்லை. அத்துட, தமிழர் பேரவையின் நடவடிக்கைகள் குறித்த தகவல்கள், சமூக ஊடகத்தில் உடனடியாகக் கிடைக்கப்பெற்றன.

4.3 546A சிராங்கூன் ரோட்டில் உள்ள அலுவலகத்தின் குத்தகை ஒப்பந்தம், மேலும் ஈராண்டுக்கு, மே 2022 வரை நீட்டிக்கப்பட்டது. மாதாந்திர வாடகை தொடர்ந்து $1,500-ஆகவே இருந்தது.

5 31 டிசம்பர் 2020 நிலவரப்படி நிதி நிலை

தமிழர் பேரவையின் நிதி நிலைமை தொடர்ந்து சீராக உள்ளது. டிசம்பர் 2020-இன் இறுதி நிலவரப்படி, தமிழர் பேரவையின் ஒட்டுமொத்த நிகர சொத்து மதிப்பீடுகள் $806,514. as at end of December 2020. இது பின்வருபனவற்றை உள்ளடக்குகிறது:

- வங்கியில் ரொக்கத் தொகை (DBS): $ 156,819.00
- நிலையான வைப்புத்தொகை : $ 647,695.00
- கிடைக்கவேண்டிய தொகை : $ 2,000.00

எண்	வங்கியின் பெயர்	முதலீட்டுத் தொகை	முதிர்ச்சியுறும் தேதி
1	கிழக்காசிய வங்கி	$107,781	8 ஜூன் 2022
2	இந்தியன் ஓவர்சீஸ் வங்கி	$133,116	06 ஏப்ரல் 2022
3	யுகோ வங்கி	$106,798	26 பிப்ரவரி 2020
4	மே வங்கி	$300,000	4 ஆகஸ்ட் 2022
	மொத்தம்	**$647,695.00**	

2020-ஆம் ஆண்டில், தமிழர் பேரவையின் வருமானம் $138,867.00. அதன் செயல்பாட்டுச் செலவு $128,413.00. அவ்வகையில், செலவைக் காட்டிலும் $10,454 கூடுதல் வருமானம் கிடைக்கப்பெற்றது (வரிக்கு முன்னர்)

ஒவ்வொரு மாதம் / ஆண்டு அடிப்படையில் பெறப்படும் வருமானம், ஏற்கப்படும் செலவு ஆகியவற்றின் அடிப்படையில், ரொக்க அடிப்படையில், தணிக்கையாளர்கள் வரவுசெலவுக் கணக்கைத் தயாரித்துள்ளனர். அவ்வகையில், ஜனவரி 2021 நடைபெறவேண்டிய கல்வி உதவி நிதி விருதுகளுக்காக நன் கொடையாக வழங்கப்பட்ட $50,000-க்கும் அதிகமான தொகை, 2020-ஆம் ஆண்டிலேயே கிடைக்கப்பெற்று, அவ்வாண்டின் வருமானமாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

6 உறுப்பினத்துவம் / ஜைரோ

6.1 2020-ஆம் ஆண்டின் இறுதி நிலவரப்படி, நமது உறுப்பினத்துவ எண்ணிக்கை பின்வருமாறு :-

உறுப்பினத்துவ வகை	2015	2016	2017	2018	2019	2020
வாழ்நாள்	275	281	295	298	300	295
சாதாரண	617	619	574	665	402	342
இளையர்	30	30	25	35	10	12
இணை அமைப்பு	34	36	40	37	33	30

வாழ்நாள் உறுப்பினத்துவ எண்ணிக்கை, காலமானவர்களைக் கருத்தில் கொண்டு திருத்தப்பட்டுள்ளது. சாதாரண உறுப்பினர்களில் பெரும்பாலானோர், ஜைரோ வழி பணம் செலுத்துவதால், ஆண்டு முழுமைக்கும் பணம் செலுத்தத் தவறியவர்கள் அல்லது ஆண்டு சந்தாத் தொகையைச் செலுத்தத் தவறியவர்கள் நீக்கப்பெற்று, சாதாரண உறுப்பினத்துவ எண்ணிக்கையும் திருத்தப்பட்டுள்ளது.

இணை அமைப்புகளின் உறுப்பினத்துவ எண்ணிக்கையும் மேலும் குறைந்துள்ளது. அதற்கு அமைப்புகளின் பதிவு சட்டபூர்வமாக ரத்து செய்யப்பட்டது அல்லது தமிழர் பேரவையின்

அரசியலைமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் ஆண்டு சந்தாத் தொகையைச் செலுத்தத் தவறியதே காரணம். அத்தகைய அமைப்புகள் தங்களின் சந்தாத் தொகைகளை முழுமையாகச் செலுத்திய பின்னர், அவர்களின் உறுப்பினத்துவ நிலை மீண்டும் புதுப்பிக்கப்படலாம்.

6.2 ஜைரோ பங்களிப்புகள்

ஜைரோ வழி தொடர்ந்து நன்கொடை அளித்து வரும் அனைத்து உறுப்பினர்களுக்கும் தமிழர் பேரவை அதன் மனமார்ந்த நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறது. இத்தனை ஆண்டுகளில், தமிழர் பேரவையின் நிர்வாகச் செலவுகளுக்கும், பேரவை ஏற்பாடு செய்யும் பல்வேறு திட்டங்களுக்கும் இந்தப் பங்களிப்புகள் நிலையானதோர் ஆதரவாய்த் தொடர்ந்து விளங்கி வந்துள்ளன.

	2014	2015	2016	2017	2018	2019	2020
பங்களிக்கப்பட்ட தொகை	$31,723	$31,033	$29,188	$27,283	$25,953	$25,251	$24,369

வருடாந்திரப் பங்களிப்புத் தரவுகளின் அடிப்படையில், ஒவ்வோர் இத்தொகை குறைந்து வருவது குறித்துக்கொள்ளப்பட்டது. ஒவ்வோர் ஆண்டின் இறுதியிலும் மறுபரிசீலனை ஒன்று மேற்கொள்ளப்பட்டு, கடந்த 12 மாதங்களாக பணம் செலுத்தாதவர்களின் பதிவுகள் அகற்றப்படுகின்றன. நிர்வாக வங்கிச் செலவுகளைக் குறைப்பதற்கு இது அவசியம். பணம் செலுத்தாத நபர்களைத் தொடர்புகொள்ள மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பெருமளவில் பயன் அளிக்கவில்லை.

ஜைரோ வழி பெறப்படும் பங்களிப்புகள், வெவ்வேறு கணக்குகளின் அடிப்படையில் முறையாக பகுத்து வைக்கப்பட்டுள்ளன.

2014-ஆம் ஆண்டின் இறுதி நிலவரப்படி, தணிக்கை செய்யப்பட்ட வரவுசெலவு அறிக்கையின்படி, நிதி ஒதுக்கீடு பின்வருமாறு:

நிர்வாக, பொது நிதி: $221,887.00
கட்டட நிதி: $182,702.00
கலாசார நிதி: $149,495.00
கல்வி நிதி: $235,079.00

ஒவ்வோர் ஆண்டும் பெறப்படும் ஜைரோ பங்களிப்புகளின் மொத்தத் தொகை பின்வருமாறு:

ஆண்டு	மொத்தத் தொகை	நிர்வாகம், பொது	கட்டடம்	கலாசாரம்	கல்வி
2015	$31,033.00	$12,413.20	$6206.60	$6206.60	$6206.60
2016	$29,188.00	$11,675.20	$5837.60	$5837.60	$5837.60
2017	$27,283.00	$10,913.20	$5456.60	$5456.60	$5456.60
2018	$25,953.00	$10,381.20	$5190.60	$5190.60	$5190.60
2019	$25,251.00	$10,100.40	$5050.20	$5050.20	$5050.20
2020	$24,369.00	$9,747.60	$4873.80	$4873.80	$4873.80
Total	**$163,077.00**	**$65,230.80**	**$32,615.40**	**$32,615.40**	**$32,615.40**

மேற்குறிப்பிட்ட தொகைகளின் அடிப்படையில், ஒவ்வொரு நிதிக்கும் டிசம்பர் 2020 இறுதிவாக்கில் பதிவிடப்பட்ட தொகை பின்வருமாறு,

நிர்வாகம், பொது	$287,117.80
கட்டடம்	$215,317.40
கலாசாரம்	$182,110.40
கல்வி	$267,694.40

6.3 இணை அமைப்புகள்

2020-ஆம் ஆண்டின் இறுதி நிலவரப்படி, தமிழர் பேரவையின் இணை அமைப்புகளாக 30 அமைப்புகள் இருந்தன. இணை அமைப்புகளின் முழுப் பட்டியல் பிற்சேர்க்கை 'ஈ'-இல் இணைக்கப்பட்டுள்ளது.

2020-ஆம் ஆண்டில், பின்வரும் அமைப்புகள் கொடுக்கப்பட்டுள்ள காரணங்களின் பேரில், தமிழர் பேரவையின் இணை அமைப்புப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டன:

1	செய்தித்தாள் விற்பனையாளர் சங்கம்	7 ஆண்டாக சந்தாத் தொகை செலுத்தவில்லை
2	செம்பவாங் தமிழர் சங்கம்	5 ஆண்டாக சந்தத் தொகை செலுத்தவில்லை; இணை அமைப்புப் பட்டியலிலிருந்து விலகிக்கொள்ள விருப்பம் தெரிவித்தல்
3	கலைப்பித்தர்கள் கழகம்	6 ஆண்டாக சந்தாத் தொகை செலுத்தவில்லை

தமிழர் பேரவை ஆண்டு முழுவதும் ஏற்பாடு செய்யும் பல்வேறு நிகழ்ச்சிகளில் தொடர்ந்து இணை அமைப்புகளை ஈடுபடுத்தி வருகின்றது. தமிழர் பேரவை மக்கள் கழகத்தில் தமது அமைப்புகளுக்கான உறுப்பினத்துவத்தைத் தொடர்கிறது. அதே வேளையில், வளர்தமிழ் இயக்கம், தமிழ்மொழி கற்றல் வளர்ச்சிக் குழு, தேசிய மொழிபெயர்ப்புக் குழுவின் தமிழ்மொழி வளக் குழு ஆகியவற்றிலும் தமிழர் பேரவை பிரதிநிதிக்கப்பட்டு வருகின்றது. இக்குழுக்களில், தமிழர் பேரவையைப் பிரதிநிதித்து தலைவர் திரு பாண்டியன் உறுப்பினராகப் பொறுப்பு வகிக்கிறார்.

7 தமிழர் பேரவை கட்டடத் துணைக் குழு

நவம்பர் 2019-இல் நடைபெற்ற ஆண்டுப் பொதுக் கூட்டத்தில், தமிழர் பேரவை கட்டடத் துணைக் குழுவாக திரு ஆ மணிமாறன் நியமிக்கப்பெறுவதற்கு உறுப்பினர்கள் ஒப்புதல் தெரிவித்தனர்.

22 ஜனவரி 2020 அன்று நடந்த முதல் மேலாண்மைக் குழு கூட்டத்தில், திரு மணிமாறன் துணைக் குழுவின் பணிகளைத் துவங்கிவிட்டதாகவும், 21 மார்ச் 2020-க்குள் தமது அறிக்கையை நிறைவுசெய்ய எண்ணம் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார். அதன்பின்னர், அவரிடமிருந்து அதுபற்றி எந்த விவரங்களும் கிடைக்கப்பெறவில்லை. அக்டோபர் 2020-இல், அவர் உடல்நலமின்றி, நீண்டகாலத்திற்கு மருத்துவமனை விடுப்பில் இருந்ததாகவும் மேலாண்மைக் குழுவிற்குத் தெரிவிக்கப்பட்டது.

3 மே 2021 அன்று, திரு மணிமாறனிடமிருந்து ஒரு மின்னஞ்சல் கிடைக்கப்பெற்றது. அந்த மடலில், அவர் தமது அறிக்கையை மே 2021 இறுதிக்குள் அல்லது ஜூன் 2021 தொடக்கத்தில் சமர்ப்பிக்கவிருப்பதாகக் கூறியிருந்தார். அவ்வாறு எந்த அறிக்கையும் சமர்ப்பிக்கப்படாத காரணத்தால், 3 ஜூலை 2021 அன்று, பொதுச் செயலாளர் அவருக்கு நினைவுறுத்தும் வண்ணம் ஒரு மின்மடல் அனுப்பியிருந்தார். 20 ஜூலை 2021 அன்று, திரு மணிமாறனிடமிருந்து இறுதி

மின்னஞ்சல் கிடைக்கப்பெற்றது. அதில், அவரது மருத்துவ நிலை காரணமாகவும், அப்போது நடப்பிலிருந்த கிருமிப்பரவல் கட்டுப்பாடுகள் காரணமாகவும் தம்மால் கட்டடத் துணைக் குழுவிற்கான இறுதிக் கூட்டத்தை ஏற்பாடு செய்து, கட்டட அறிக்கையை நிறைவுசெய்ய இயலவில்லை என்று தெரிவித்தார்.

8 தமிழர் பேரவையின் எதிர்கால பணித்திட்ட நடவடிக்கைகள்

முன்னோக்கிப் பார்க்கும்போது, 2021-ஆம் ஆண்டு, தமிழர் பேரவையின் 70-ஆம் ஆண்டு நிறைவைக் குறிக்கின்றது. நமது வழக்கமான முத்திரை நிகழ்வுகள் தவிர்த்து, இந்த சிறப்பான ஆண்டைக் குறிக்கும் வண்ணம் பல நிகழ்ச்சிகளுக்குத் திட்டமிடப்பட்டுள்ளது:

- **கல்வி உதவி நிதி விருதுகள்***
  கல்வி உதவி நிதி விருதுகள், தமிழர் பேரவையால் ஆண்டுதோறும் வழங்கப்பெற்று வருகிறது. ஒவ்வொரு பிள்ளையும் வாய்ப்பு வழங்கப்பெற்று, மாணவர்கள் தொடர்ந்து சாதிக்க முனைவதை அங்கீகரித்து ஊக்குவித்து, அவர்கள் கல்வியில் சிறப்பாக செயல்பட இந்நிகழ்வு துணை நிற்கிறது. பாடப்புத்தகங்கள், எழுதுகோல்கள் ஆகியவற்றை வாங்கும் பொருட்டு, சிறிது நிதியுதவி வழங்குவதுடன், மாணவர்கள் தங்கள் இலக்கு நோக்கி முனைப்புடன் செயல்பட்ட இந்நிகழ்வு எண்ணம் கொண்டுள்ளது.

- **சொற்போர்***
  தமிழர் பேரவையால் ஈராண்டுக்கு ஒருமுறை ஏற்பாடு செய்யப்படும் இந்நிகழ்வு, தொடக்கப்பள்ளி மாணவர்களிடையே தமிழ் பேசும் திறனையும் புத்தாக்க சிந்தனையையும் ஊக்குவிக்க எண்ணம் கொண்டுள்ளது.

- **இணை அமைப்புகளுடனான ஈடுபாட்டு அமர்வுகள்**
  தமிழர் பேரவை, இணை அமைப்புகளுடனான தொடர்புகளை அதிகரிக்க, காலாண்டு அடிப்படையில் இணையவழி ஈடுபாட்டு அமர்வுகளுக்கு ஏற்பாடு செய்ய முனைகிறது. அமைப்புகளுக்குத் தேவைப்படும் உதவியை வழங்கவும், அவை கொண்டுள்ள யோசனைகள், சிரமங்கள் குறித்து கலந்துரையாடவும் இந்நிகழ்வுகள் துணைபுரியும். தேவைக்கேற்ப, இந்நிகழ்வுகள் கலந்துரையாடல் அமர்வுகளாக அல்லது பயிலரங்குகளாக ஏற்பாடு செய்யப்படலாம்.

- **தேசிய தின விருந்து & தமிழர் பேரவையின் 70-ஆம் ஆண்டு நிறைவு துவக்க விழா**
  தமிழர் பேரவையின் வருடாந்திர நிதி திரட்டு நிகழ்வான தேசிய தின விருந்து, தேசிய தினத்தைக் கொண்டாடும் பொருட்டு ஏற்பாடு செய்யப்படும். தமிழர் பேரவையின் இணை அமைப்புகள் ஒன்றுகூடுவதற்கான தளமாகவும் இது திகழும். இவ்வாண்டு, தேசிய தின விருந்து தமிழர் பேரவையின் 70-ஆம் ஆண்டு நிறைவுக் கொண்டாட்ட துவக்க நிகழ்ச்சியுடன் இணைந்து நடத்தப்படும். ஓராண்டு கொண்டாட்டத்தின் துவக்கத்தை அது குறிக்கும்.

- **தமிழர் பேரவையின் 70-ஆம் ஆண்டு நிறைவுக் கொண்டாட்டங்கள்**
  தமிழர் பேரவையின் 70 ஆண்டைக் கொண்டாடுவதற்கான, பெரிய அளவிலான, ஆண்டு முழுமைக்கும் நடைபெறவிருக்கும் பல நிகழ்ச்சிகளை இது உள்ளடக்கும். 70-ஆம் ஆண்டில் நடத்தப்படவுள்ள ஒவ்வொரு நிகழ்வும், நிறைவுக் கொண்டாட்ட நோக்கங்களுக்கு இணையாக இருப்பது உறுதிசெய்யப்படும். மேலும் அதிகமான சமூகம் சார்ந்த நிகழ்ச்சிகளை நடத்த நாங்கள் எண்ணம் கொண்டுள்ளோம்.

- **மூத்த குடிமக்களை ஈடுபடுத்துதல்**
  இந்நிகழ்வு தொடர் பயிலரங்குகளின் வழி மூத்தோருக்குத் திறன்களையும் தன்னம்பிக்கையையும் அளிப்பதில் கவனம் செலுத்தும். மூத்த குடிமக்கள் தங்களது அன்றாட வாழ்க்கையில் உதவக்கூடிய புதிய தொழில்நுட்ப மேம்பாடுகள் பற்றி அறிந்துகொள்ளக்கூடும் (எ.கா. Paylah பயன்படுத்துதல், Health Hub SG வழி மருத்துவச் சந்திப்புகளுக்கு முன்பதிவுசெய்தல்). மூத்தோர் இளம் தலைமுறையினருடன் தங்கள் வாழ்க்கை அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதற்கான தளமாகவும் அது திகழும்.

- **கலந்துரையாடல் தொடர்**
  வழக்கமான தனிப்பட்ட வாழ்க்கையில் சிரமங்களை எதிர்கொண்டு, அவற்றுக்கான உதவியை சரியாகப் பெறத் தெரியாத சிங்கப்பூரர்களிடமிருந்து கருத்து சேகரிப்பதை இத்தொடர் நோக்கமாகக் கொண்டுள்ளது. இது அடித்தளக் கருத்தாய்வு மூலமாக நடத்தப்படலாம். அதன்வழி கருத்துகளும் பிரச்சினைகளையும் கண்டறியப்படும். அதனை அடுத்து, முறையான தீர்வுகள் வரையப்பெற்று, அவை சார்ந்த அதிகாரிகளிடம் ஒப்படைக்கும்.

- **சமூகவியல் கருத்தரங்கு**
  சமூகவியல் மாநாடு நடப்பு விவகாரங்கள் குறித்து ஆராய்ந்து, அவற்றுக்கான தீர்வுகளை வரையறுக்கும். குறிப்பிட்ட காலகட்டத்தில், ஒரு தொடர் நிகழ்வாக நடைபெறும் மாநாட்டில் வாழ்க்கையில் பல்வேறு பின்னணிகளைச் சேர்ந்த மக்கள் அவரவர் நிலை பாராமல் கலந்துகொண்டு பிரச்சினைகளையும் தீர்வுகளையும் பகிர்ந்துகொள்வர். மக்கள் மக்களுக்காக தீர்வுகளைக் கண்டறியும் போக்கை இது முன்வைக்கும். மொழி, பொருளாதார, வேலைவாய்ப்பு, வாழ்க்கைமுறை போன்ற அம்சங்கள் கலந்து ஆலோசிக்கப்படும்.


- **சிற்றரங்குகள்**
  இத்தகைய கருத்தரங்குகள் அதிகம் பேசப்படாத அம்சங்கள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வூட்டும். மின்னிலக்க உளைச்சல், தற்கொலை குறித்த விழிப்புணர்வு, வாழ்க்கைத் தொழில் தொடர்புக் கட்டமைப்பு ஆகியவை இவற்றுள் அடங்கும். இந்தக் கருத்தரங்குகள் தகுந்த பார்வையாளர்களைச் சென்றடையவேண்டி கவனமாகத் திட்டமிடப்படும். இத்தகைய அதிகம் பேசப்படாத, உண்மையான பிரச்சினைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதே அவற்றின் நோக்கம்.

** திட்டப்பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது. இந்த நிகழ்வுக்கான ஆண்டறிக்கை, தமிழர் பேரவையின் 2022-ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையில் இடம்பெறும்.*

இந்தப் பல்வேறு திட்டங்களும், சமூகத்தில் உள்ள பல்வேறு தரப்பினரின் (பள்ளி செல்லும் பிள்ளைகள், இளம் பெரியவர்கள், மூத்தோர்) தேவைகளையும் அக்கறைகளையும் நிவர்த்தி செய்ய முனைகின்றன. புதிய திட்டங்கள் உருவாக்கப்படுவதன் மூலம், தமிழர் பேரவை சிந்தனை முதல் செயல்பாடு வரை, திட்டப்பணிகள் மேற்கொள்ளும் முறைகளைத் தரநிலைப்படுத்த முனைகிறது. இது பின்வரும் அம்சங்களைக் கொண்டுள்ளது:


(1) சிந்தனைப் படிவம்

சிந்தனைப் படிவமானது, திட்டப்பணியின் உருவாக்கத்திற்கு முன், அதுபற்றிய நோக்கங்களையும் முக்கிய அம்சங்களையும் தாங்கி வரும் ஓர் ஆவணமாகத் திகழ்கின்றது. இது திட்டப்பணி தொடங்குவதற்கு ஓராண்டு முன்னர் முதல் சமர்ப்பிக்கப்படலாம். சிந்தனைகள் உறுதிசெய்யப்படவேண்டிய அவசியமில்லை. இப்படிவம் பின்னரும்கூட திருத்தப்படலாம். ஏற்பாட்டுக் குழுத் தலைவருக்கும் ஏற்பாட்டுக் குழுவினருக்கும் இடையிலான கலந்துரையாடல் வெளிப்பாட்டுத்தன்மையுடன் இருப்பதற்கு இது வழிவகுக்கும். பின்னர், ஏற்பாட்டுக் குழு தங்கள் சிந்தனைகளைப் பரிசீலித்து, அவற்றை மேம்படுத்தலம்.




(2) பரிந்துரை முறைமை

பரிந்துரை முறைசார்ந்த ஒன்றாக, அதன் நுண்ணிய விவரங்கள் ஆவணப்படுத்தப்படும் வகையில் அமையப்பெற்றுள்ளது. மானியங்களுக்கு விண்ணப்பிக்கும்போது இது உதவியாக இருக்கும். மேலும், இத்தகைய அமைப்புக்குள்ளான பரிந்துரைகள், அடுத்தடுத்து வரும் நிகழ்வுகளுக்கான ஒரு மேற்கோளாகத் திகழும். மேலாண்மைக் குழு உறுப்பினர்களும் அத்திட்டம் பற்றி மேலும் தெரிந்துகொள்ள இப்பரிந்துரையை நாடலாம்.


TAMILS REPRESENTATIVE COUNCIL
(Corporate Member of People's Association)
546A Serangoon Road, Singapore 218168
Tel: 6292 1966 • info@trc.org.sg • www.trc.org.sg

TRC Proposal template

1. Project name
2. Objective(s)
3. Deliverables
4. Intended event date
   Click or tap to enter a date.
5. Timeline for planning *(monthly planning)*
6. Tentative team members *(Team must comprise of atleast 1 other MC member)*
7. Pre-event planning (including logistics)


8. Event details
   a. Duration
   b. Mode
      Choose an item.
   c. Frequency
      Choose an item.
   d. Logistics required on event day
   e. Budget *(rough estimate)*
9. Other remarks/information

9 தமிழர் பேரவையின் முன்னாள் தலைவர், டாக்டர் ஆர் தேவேந்திரனின் மறைவு

29 டிசம்பர் 2020, செவ்வாய்கிழமை அன்று, 'தீனன்' என அன்பாக அழைக்கப்பட்டு வந்த டாக்டர் ஆர் தேவேந்திரன் தமது 79-ஆவது வயதில் காலமானார். அவர் 2000-ஆம் ஆண்டு முதல் 2016-ஆம் ஆண்டு வரையில் தமிழர் பேரவையின் தலைவராகப் பொறுப்பு வகித்தார். அவரது பதவிக்காலத்தில், உறுப்பினர்கள், இணை அமைப்புகள், நிதியிருப்புகள் ஆகியவற்றை இன்றிருக்கும் அளவுக்கு அதிகரிக்க, டாக்டர் தேவேந்திரன் பெருமளவு முயற்சி மேற்கொண்டார். அவரது பதவிக்காலத்தில், பல இளம், முனைப்பாற்றல் மிகுந்த உறுப்பினர்கள் தமிழர் பேரவையில் முக்கியப் பொறுப்புகளை வகித்தனர். அவரது தொடர்புக் கட்டமைப்பு, தலைமைத்துவ பாணி ஆகியவற்றினால் தமிழர் பேரவையின் நன்மதிப்பு பெரிதும் மேம்பாடு கண்டது. கடந்த 20 ஆண்டில், அவர் வழங்கி வந்த தலைமைத்துவத்திற்கும் வழிகாட்டுதலுக்கும் தமிழர் பேரவை அவருக்கு நன்றி நவில்கின்றது.

தமிழர் பேரவை அதன் இணை அமைப்புகளுடன் இணைந்து The Straits Times, தமிழ் முரசு ஆகிய இரண்டு நாளேட்டிலும் முழுப் பக்க இரங்கல் செய்தியை வெளியிட்டதன் மூலம் தமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொண்டது. இரங்கல் செய்திக்கான செலவு பிற அமைப்புகளுடன் (இலங்கை விளையாட்டு மன்றம், சிங்கப்பூர் இலங்கைத் தமிழர் சங்கம், Telecoms Credit கூட்டுறவு சங்கம், Secureguard Security Services கூட்டுறவு சங்கம் லிமிடெட், ஸ்ரீ செண்பக விநாயகர் ஆலயம், Security Masters பிரைவேட் லிமிடெட்) பகிர்ந்துகொண்டது. இந்த அமைப்புகளில் டாக்டர் தேவேந்திரன் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார்.

10 தமிழர் பேரவையின் இளையர் அணி

நிறுவப்பெற்றது முதல் 70 ஆண்டு காலம் வரை, தமிழர் பேரவை தமிழ்ச் சமூகத்திற்கும் சிங்கப்பூர்ச் சமூகத்திற்கும் தேவையறிந்து சேவையற்றி வந்துள்ளது. அவ்வகையில், தமிழ்ச் சமூகத்தில் தமது முத்திரையைப் பதித்துள்ளது, தமிழர் பேரவை. வருங்காலத்தில், தொழில்நுட்ப யுகத்தில் அடியெடுத்து வைக்கும் வேளையில், தமிழ்ச் சமூகத்தில் நீடித்த வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கு இளையரின் ஈடுபாடு மிகவும் முக்கியம். இளம் தலைமுறையினருக்கு ஊக்கமளிக்கும் வேட்கையே, தமிழர் பேரவையின் இளையர் அணி நிறுவப்பெறுவதற்கு வித்திட்டது.

தமிழர் பேரவையின் இளையர் அணியாக, நாங்கள் சமூகத்தில் உள்ள தமிழ் இளையர்களின் குரலாக மட்டுமின்றி, பல்வேறு துறைகளில் தமிழ் இளையர்கள் பங்கேற்று உன்னதத்தை எட்டுவதற்கான தளமாகவும் திகழ்கிறோம். சமூகத் திட்டங்களை மேற்கொள்வதில் மாறுபட்ட கண்ணோட்டத்தை நாட முற்படும் நாங்கள், சமூகத்திற்கு சேவையாற்றும் முக்கியத்துவத்தை நமது தமிழ் இளையர்களிடையே விதைக்க நம்பிக்கை கொண்டுள்ளோம்.

துவங்கப்பட்ட தினம் : 20 ஜனவரி 2019
உறுப்பினர்கள் : 38 உறுப்பினர்கள் (3 ஜூன் 2020 நிலவரப்படி)
6 இயக்ககங்கள் :

- கலைகள், மொழி
- விளையாட்டு, நல்வாழ்வு
- சமூக அரசியல்
- தொழில்நுட்பம்
- தொழில்முனைப்பு
- சமூக மேம்பாடு

நோக்கங்கள்:

- பொதுவான ஆர்வங்களும் இலக்குகளும் உடைய இளையர்களிடையே ஒற்றுமைமிகு ஆற்றலை மேம்படுத்துதல்
- திறன்கள் அடையாளம் காணப்பட்டு, வளர்ச்சி அடைவதற்கான தளங்களை அமைத்துக் கொடுத்தல்
- தமிழ்ச் சமூக நிகழ்வுகள், சமுதாய மேம்பாடு ஆகியவற்றின் மீதான ஆர்வத்தை வளர்த்தல்

தொலைநோக்கு பார்வை:
தமிழ்ச் சமூகத்தினரிடையே உன்னதம் பற்றிய சிந்தனைகளை உருமாற்றும் புதுமைவாதிகளாகத் திகழ்தல்

இலக்கு:
இயல்புநிலை முறைகளுக்குச் சவால் விடுத்து, மாற்றத்தை அரவணைக்கும் போக்கை முன்னெடுத்து தமிழ் இளையர்களுக்கு புதுமையான வாய்ப்புகளை உருவாக்குதல்

விழுமியங்கள்:

- நாம் வாழும் உலகத்திற்கு இரக்க சிந்தனை
- நமக்கும் நமது செயல்பாடுகளுக்கும் உண்மைIntegrity to ourselves and our pursuits.
- நாம் செய்யும் அனைத்திலும் புத்தாக்கம்

நோய்ப் பரவலை முறியடிப்பதற்கான அதிரடித் திட்டத்திற்கு முன்னர்

1) Candid Confessions – **இரண்டாவது கருத்தரங்கு**

தேதி : 8 பிப்ரவரி 2020
நேரம் : பிற்பகல் 1 மணி முதல் மாலை 6 மணி வரை
இடம் : சிங்கப்பூர் கல்சா சங்கம்
வருகையாளர்கள் : 34 பங்கேற்பாளர்கள், 4 பேச்சாளர்கள், தமிழர் பேரவை இளையர் அணியின் 15 உறுப்பினர்கள், மொத்தத்தில் 53 பேர்

- Candid Confessions ஆண்டு முழுவதும் நடைபெறும் ஒரு கருத்தரங்கு. காலாண்டுக்கு ஒன்று என ஓர் ஆண்டில் 4 கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன. இதன் ஒட்டுமொத்த கருப்பொருள் இனம் தொடர்பிலானது. நமது சமுதாயத்தில் நம்மில் பலரை பாதிக்கக்கூடிய பல அம்சங்கள் பற்றி ஆராயும் இந்தக் கருத்தரங்கு, பலதரப்பட்ட சமுதாயக் குழுக்களைச் சேர்ந்தவர்களில் இதில் கலந்துகொள்ள அழைப்பு விடுக்கின்றது.
- முதல் கருத்தரங்கு, இனம் தொடர்பான விவகாரங்களை விரிவாக அறிமுகப்படுத்த முனைந்தது. பொழுதுபோக்காக பின்பற்றப்பட்டு இனவாதம், அன்றாடம் எதிர்கொள்ளும் பாகுபாடு, ஒருதலைப்பட்ச கருத்துகள், நகைச்சுவையாக பின்பற்றப்படும் இனவாதப் போக்கு ஆகியவற்றில் இக்கருத்தரங்கு கவனம் செலுத்தியது. இரண்டாவது கருத்தரங்கு, இனத்தை ஒரு முன்னுரிமையாகக் கருதும் போக்கில் கவனம் செலுத்தியது. அண்மை ஆண்டுகளில், இப்போக்கு பெருமளவு குறைகூறலுக்கு ஆளாகியுள்ளது.
- இளம் சீக்கியர் சங்கத்துடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது

நோய்ப் பரவலை முறியடிப்பதற்கான அதிரடித் திட்டம்

1) Code Break

தேதி : 9 மே 2020
நேரம் : பிற்பகல் 1 முதல் 3 மணி வரை
இடம் : Zoom
வருகையாளர்கள் : 12 வயதிற்கு மேற்பட்டோர்; சுமார் 30 பங்கேற்பாளர்கள்

- Code Break பயிலரங்கானது, நற்பணிப் பேரவையுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட Python நிரலாக்கம் தொடர்பிலான ஓர் அறிமுகப் பயிலரங்கு
- இந்தப் பயிலரங்கு Zoom வழி நடத்தப்பட்டது.
- பங்கேற்பாளர்கள் Python முறை கொண்டு, நிரலாக்கத்தின் அடிப்படைக் கூறுகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டனர்.
- தமிழர் பேரவை இளையர் அணியைச் சேர்ந்த ஃபெலிசியா, கௌதம் ஆகியோர் இந்தப் பயிலரங்கை வழிநடத்தினர்.

2) Machi Pichi

தேதி : ஒவ்வொரு வெள்ளிக்கிழமை; முதல் நிகழ்ச்சி 10 மே அன்று இடம்பெற்றது
நேரம் : இரவு 9.30 மணி
இடம் : Believe, இளமை Facebook பக்கத்தில் நேரலை
நிகழ்ச்சி நெறியாளர்கள்: அருண் வாசுதேவ், கார்த்திக் (இளமை)
பார்வையாளர்கள் : வாரந்தோறும் சுமார் 1,000 பேர்; பெரும்பாலும் இளம் பெரியவர்கள், பெற்றோர் (இந்தியர்கள்)

- Machi Pichi, இளமை அமைப்புடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு முன்னோடிக் கலந்துரையாடல் நிகழ்ச்சி. இந்நிகழ்ச்சியில், வெவ்வேறு துறைகளில் வளர்ந்துவரும் இளையர்கள் சித்திரிக்கப்பட்டனர். திறனாளர்கள் தங்கள் ஊக்கசக்தி, ஆர்வம், சவால், அவர்களின் துறையில் அவர்கள் மேற்கொண்ட பயணம் ஆகியவை பற்றி பேசினர்.
- அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கணிதம் என்ற பாரம்பரிய சிந்தனையை விடுத்து, இளையர்கள் எவ்வாறு கலைத் துறைக்குப் பங்களித்து வருகின்றனர் என்பதை வெளிக்காட்டும் பொருட்டு, இளம் பார்வையாளர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தை இந்நிகழ்ச்சி கொண்டிருந்தது.

3) Write From Home

தேதி : ஒவ்வொரு திங்கட்கிழமை
இடம் : தமிழர் பேரவை இளையர் அணியின் Instagram பக்கம், தமிழர் பேரவையின் Facebook பக்கம்

- WFH நிகழ்ச்சியானது, Instagram தளத்தில் தமிழர் பேரவை மேற்கொண்ட முதல் சவால் நிகழ்ச்சியாகும். இது 14 மே அன்று தொடங்கப்பட்டது. எங்களை Instagram பக்கத்தில் பின்தொடர்பவர்கள், வாரந்தோறும் வெளியிடப்படும் ஒரு தொடரின் அடிப்படையில், ஆங்கிலத்தில் அல்லது தமிழில் ஒரு கவிதை அல்லது 15 வார்த்தையிலான கதையை எழுதவேண்டும்.

- இச்சவால் தொடங்கப்பெற்ற இரண்டு வாரங்களில், சுமார் 10 பேர் தங்கள் கவிதை / கதைகளை அனுப்பி வைத்தனர்.

4) உங்களுக்குள் ஆர்னால்டு

- 'உங்களுக்குள் ஆர்னால்டு' எனப்படும் Instagram தொடர், மக்கள் வீட்டிலிருந்தபடியே செய்து பார்க்கக்கூடிய உடற்பயிற்சிகளையும், பல்வேறு ஆரோக்கிய நளபாகக் குறிப்புகளையும் பகிர்ந்துகொண்டனர்.
- இத்தொடர் 14 மே அன்று தொடங்கப்பட்டது. ஆரோக்கியமான சமையல் குறிப்புகள், எளிய உடற்பயிற்சிகள் ஆகியவை அடங்கிய புதிய காணொளி ஒவ்வொரு வாரமும் வெளியிடப்படும்.

5) வீட்டில் கச்சேரி

- 'பாட்டுக்கு பாட்டு' முறையிலான இணையவழிப் போட்டியாக நடத்தப்பட்ட இந்நிகழ்வில், மக்கள் முன்னைய பாடலின் கடைசி எழுத்தில் தொடங்கும் தமிழ்ப் பாடலைப் பாடும் தங்களது காணொளியை வெளிப்படுத்தினார்கள்.

6) Meme உருவாக்கம்:

கொவிட்-19 குறித்த ஆக அண்மைத் தகவல்களை Memes வழி தமிழ்ச் சமூகத்திற்குத் தொகுத்தளிக்கும் நடவடிக்கை

நோய்ப் பரவலை முறியடிப்பதற்கான அதிரடித் திட்டத்திற்கு பின்னர்

1. **CyberAware (19 செப்டம்பர், இரவு 7 மணி, இணையவழி)**

இணைய நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக Mental ACT Sg-யுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட ஒரு மனநலத் திட்டம். TouchCyber Wellness அமைப்பின் தலைவர், ஊடக அறிவாற்றல் மன்றத்தின் உறுப்பினர் (திரு அன்பரசு), ஒரு வழக்கறிஞர் ஆகியோர் பேச்சாளர்களாக வரவழைக்கப்பட்டனர். இணையம்வழி அச்சுறுத்துபவர், அச்சுறுத்தப்படுபவர் ஆகிய இரு தரப்பினரின் பார்வையில், அச்சுறுத்தலில் பாதிப்புகள் குறித்து இந்நிகழ்ச்சி ஆராய்ந்தது.

இந்நிகழ்ச்சி, பாதிக்கப்பட்டவர்களின் நேரடி அனுபவங்களை உள்ளடக்கிய 3-பாக காணொளித் தொடரையும் வெளியிட்டது. இந்நிகழ்ச்சி 'எதிரொலி' நிகழ்ச்சியில் சித்திரிக்கப்பட்டது.

2. Project திட்டப்பணி (3 அக்டோபர், பிற்பகல் 3 மணி, இணையவழி)

தமிழர் பேரவையின் இளையர் அணி, IMPROF அமைப்பு, தமிழா அமைப்பு ஆகிய மூன்று அமைப்புகளும் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த இந்த நிகழ்ச்சி, புது நிறுவனங்கள், சமுதாய அமைப்புகள் ஆகியவற்றுடன் இளம் தொண்டூழியர்களை வேலைப் பயிற்சி அல்லது தொண்டூழிய அடிப்படையில் இணைத்து, அவற்றின் சமூக ஊடகப் பயன்பாட்டை அதிகரிக்க எண்ணம் கொண்டிருந்தது. ஒவ்வொரு தொண்டூழியர் அணியும் தாங்கள் இணைக்கப்பட்ட வெவ்வேறு அமைப்புடன் அணுக்கமாகப் பணியாற்றி, அவற்றின் மின்னிலக்க ஊடக இயக்கங்களை மேம்படுத்தினர்.

3. **Catalyse: இந்தியத் தொழில்முனைவர்கள் கருத்தரங்கு 2020 (தொடர்கிறது)**

தமிழர் பேரவையின் இளையர் அணி, நற்பணி இளையர் அணி, இளம் சீக்கியர் சங்கம், சிண்டா இளையர் மன்றம் ஆகிய அமைப்புகளால் இணைந்து நடத்தப்பட்ட 3 பகுதிகளைக் கொண்ட இந்த நிகழ்ச்சி, தமிழர் பேரவையின் இளையர் அணியும் நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் தமிழ் இலக்கிய மன்றமும் இணைந்து ஏற்பாடு செய்த 'வணிக வேட்டிய' நிகழ்ச்சியின் தொடர்ச்சியாகும். இந்நிகழ்ச்சிக்கு சிங்கப்பூர் இந்திய வர்த்தகத் தொழிற்சபை ஆதரவளித்தது. புதுப்பிக்கப்பட்ட் இந்த நிகழ்ச்சியின் நோக்கம், 3 பகுதிகளாக பகுக்கப்பட்டுள்ளன – முதன்மை வகுப்புகள், பயிலரங்குகள், படைப்புகள்.

4. **'நமது பரிவு' தொகுப்புத்திட்டம்**

மிகவும் சிரமமான / தனித்துவம் வாய்ந்த சூழல்களால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் மூத்தோருக்கும் உதவித் தொகுப்புத்திட்டங்கள் கொடுக்கப்பட்டன.

<u>இதர நடவடிக்கைகள் / தனிப்பட்ட மேம்பாடு</u>

1. **மனநலம் குறித்து Club2Care வழங்கிய பயிற்சி**

இளையர் அணி உறுப்பினர்கள், மனநலப் பிரச்சினைகளை அடையாளம் காண்பது, இந்திய சமூகம் தகாதவை எனக் கருதும் அம்சங்கள் பற்றிக் கலந்துரையாடுவது முதலிய அம்சங்கள் குறித்து Club2Care ஏற்பாடு செய்த அரை-நாள் பயிலரங்கில் கலந்துகொண்டனர். பங்கேற்பாளர்கள் ஒற்றையர் நடிப்பு, சூழ்நிலை நடிப்பு முதலிய நடவடிக்கைகள் மூலம், மனநலப் பிரச்சினையை அடையாளம் காண்பதற்கான அடிப்படைத் திறன்களையும் அத்தகைய உதவி தேவைப்படுவோரை உரிய உதவி வழங்கும் இடங்களுக்கு பரிந்துரைக்கும் முறைகளையும் கற்றுக்கொண்டனர்.

2. **ஜனில் புதுச்சேரி கலந்துரையாடல்: இனம் (OPSG)**

11 நிறைவு

தற்போதைய மேலாண்மைக் குழு, கடப்பாடு மிகுந்த இளம் உறுப்பினர்கள் பலரைக் கொண்டுள்ளது. சமூகத்திற்கு சேவையாற்றவேண்டும் என்ற வேட்கையுடன் அவர்கள் முன்வந்தனர். மூத்த உறுப்பினர்கள் சிலர், அவர்களுக்கு வழிகாட்டுதலும் ஆதரவும் வழங்கும் பொருட்டு, மேலாண்மைக் குழுவில் தொடர்ந்து இருந்து வந்தனர். இத்தகைய ஒருங்கிணைப்பின் மூலம் மேலாண்மைக் குழு தமது உறுப்பினர்களுக்கும் சமூகத்திற்கும் உதவிசெய்து, ஆதரவளிக்கும் தமது நற்பணியைத் தொடர எண்ணம் கொண்டுள்ளது.

புதிய பத்தாண்டில் அடியெடுத்து வைக்கும் வேளையில், இளம் தலைவர்களின் உன்னதமான முயற்சிகள், மேலும் பல இளையர்கள் முன்வந்து, கடந்தகாலத் தலைவர்கள், உறுப்பினர்கள் ஆகியோரின் சீரிய பணியைத் தொடர்வதற்கு ஊக்கமாகத் திகழும் என நம்புகிறோம்.

K S மணியம்
பொதுச் செயலாளர்
தமிழர் பேரவையின் மேலாண்மைக் குழு சார்பில்

பிற்சேர்க்கை 'அ' – தமிழர் பேரவையின் மேலாண்மைக் குழு (2019 – 2021)

எண்	பதவி	பெயர்	இணை அமைப்பு
1	தலைவர்	திரு வெ பாண்டியன்	-
2	இணைத் தலைவர்	திரு சத்தியநாதன்	-
3	துணைத் தலைவர் (நிர்வாகம் & நிதி	திரு தர்மராஜ்	எளியமுறை குண்டலினி யோகா சங்கம்
4	துணைத் தலைவர் (கல்வி & மொழி)	திரு A R மசூது	சிங்கப்பூர்க் கடையநல்லூர் முஸ்லிம் லீக்
5	துணைத் தலைவர் (சமூக ஈடுபாடு)	திரு M குணசேகரன்	சிற்பிகள் மன்றம்
6	துணைத் தலைவர் (இளையர்)	திரு அருண் வாசுதேவ்	தமிழர் பேரவை இளையர் அணி
7	பொதுச் செயலாளர்	திரு சுப்ரமணியம் கண்ணப்பன்	-
8	துணைப் பொதுச் செயலாளர்	திரு நாராயணன்	இவண் நாடகக் குழு
9	துணைப் பொதுச் செயலாளர்	திருமதி லத்தீஃபா பீவி	-
10	பொருளாளர்	திரு தாம் சண்முகம்	-
11	துணைப் பொருளாளர்	திருமதி இளமாறன் தமிழ்க்கோதை	-
12	மன்ற உறுப்பினர்	திரு பாலகிருஷ்ணன்	-
13	மன்ற உறுப்பினர்	திரு கலைச்செல்வம்	பெரியார் சமூகச் சேவை மன்றம்
14	மன்ற உறுப்பினர்	குமாரி திருச்செல்வி	-
15	மன்ற உறுப்பினர்	திரு மணிமாறன்	சைவ சித்தாந்த சங்கம்
16	மன்ற உறுப்பினர்	திரு மொஹிதீன் நிஸார் அன்வர்	-
17	மன்ற உறுப்பினர்	திரு பெருமாள் அருமை சந்திரன்	தமிழ்ப் பட்டிமன்றக் கலைக் கழகம்
18	மன்ற உறுப்பினர்	திரு ஜோதிநாதன் மாணிக்கவாசகம்	-
19	மன்ற உறுப்பினர்	குமாரி ஷர்மிலி செல்வராஜி	-
20	மன்ற உறுப்பினர்	திரு சுப்பு அடைக்கலவன்	-
21	மன்ற உறுப்பினர்	திரு விக்னேஸ்வரன்	-

பிற்சேர்க்கை அ-1: மேலாண்மைக் குழு கூட்ட வருகைப் பதிவு (2020)

எண்	பதவி	பெயர்	22 ஜனவரி	20 மே	23 ஆகஸ்ட்	29 நவம்பர்	மொத்தம்
1	தலைவர்	திரு வெ பாண்டியன்	√	√	√	√	4/4
2	இணைத் தலைவர்	திரு சத்தியநாதன்	A	√	√	√	3/4
3	துணைத் தலைவர் (நிர்வாகம் & நிதி	திரு தர்மராஜ்	√	√	√	√	4/4
4	துணைத் தலைவர் (கல்வி & மொழி)	திரு A R மசூது	√	√	√	√	4/4
5	துணைத் தலைவர் (சமூக ஈடுபாடு)	திரு M குணசேகரன்	√	√	√	A	3/4
6	துணைத் தலைவர் (இளையர்)	திரு அருண் வாசுதேவ்	√	√	√	A	3/4
7	பொதுச் செயலாளர்	திரு சுப்ரமணியம் கண்ணப்பன்	√	√	√	√	4/4
8	துணைப் பொதுச் செயலாளர்	திரு நாராயணன்	√	√	√	√	4/4
9	துணைப் பொதுச் செயலாளர்	திருமதி லத்தீஃபா பீவி	√	A	A	√	2/4
10	பொருளாளர்	திரு தாம் சண்முகம்	√	√	√	√	4/4
11	துணைப் பொருளாளர்	திருமதி இளமாறன் தமிழ்க்கோதை	A	√	√	A	2/4
12	மன்ற உறுப்பினர்	திரு பாலகிருஷ்ணன்	A	√	√	√	3/4
13	மன்ற உறுப்பினர்	திரு கலைச்செல்வம்	√	√	A	√	3/4
14	மன்ற உறுப்பினர்	குமாரி திருச்செல்வி	√	√	√	A	3/4
15	மன்ற உறுப்பினர்	திரு மணிமாறன்	√	√	A	A	2/4
16	மன்ற உறுப்பினர்	திரு மொஹிதீன் நிஸார் அன்வர்	√	√	√	√	4/4
17	மன்ற உறுப்பினர்	திரு பெருமாள் அருமை சந்திரன்	A	√	√	√	3/4
18	மன்ற உறுப்பினர்	திரு ஜோதிநாதன் மாணிக்கவாசகம்	A	√	√	A	2/4
19	மன்ற உறுப்பினர்	குமாரி ஷர்மிலி செல்வராஜி	A	√	√	√	3/4
20	மன்ற உறுப்பினர்	திரு சுப்பு அடைக்கலவன்	A	√	A	√	3/4
21	மன்ற உறுப்பினர்	திரு M விக்னேஸ்வரன்	A	√	√	A	2/4

Present
√ *Absent*
A (Apology)
X Absent

பிற்சேர்க்கை 'ஆ': தமிழர் பேரவையின் இணை அமைப்புகள் (31 டிசம்பர் 2020 நிலவரப்படி)

எண்	இணை அமியப்பின் பெயர்
1	அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள் மாணவர் சங்கம் (சிங்கப்பூர்க் கிளை)
2	சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகம்
3	அதிபதி அனைத்துலக நாடகக் குழு
4	இலங்கை விளையாட்டு மன்றம்
5	தர்ம முனீஸ்வரன் ஆலயம்
6	இவண் நாடகக் குழு
7	ஜமால் முகமது கல்லூரி முன்னாள் மாணவர் சங்கம் (சிங்கப்பூர்க் கிளை)
8	கவிமாலை
9	கிருஷ்ணா நமது வழிகாட்டி
10	மக்கள் கவிஞர் மன்றம்
11	மாதவி இலக்கிய மன்றம்
12	முஸ்லிம் லீக் (சிங்கப்பூர்)
13	சிங்கப்பூர்ப் பெரியார் சமூகச் சேவை மன்றம்
14	சைவ சித்தாந்த சங்கம்
15	எளியமுறை குண்டலினி யோகா சங்கம்
16	சிங்கப்பூர் இலங்கைத் தமிழர் சங்கம்
17	சிங்கப்பூர் இந்து சபை
18	சிங்கப்பூர் இந்தியக் கலைஞர்கள் சங்கம்
19	சிங்கப்பூர்க் கடையநல்லூர் முஸ்லிம் லீக்
20	சிங்கப்பூர்த் தமிழர் இயக்கம்
21	சிற்பிகள் மன்றம்
22	ஸ்ரீ இராமர் ஆலயம், சாங்கி
23	ஸ்ரீ குரு ராகவேந்திரா மன்றம், சிங்கப்பூர்
24	ஸ்ரீ முனீஸ்வரன் ஆலயம்
25	ஸ்ரீ ருத்ர காளியம்மன் ஆலயம்
26	திருவள்ளுவர் தமிழ் வளர்ச்சிக் கழகம்
27	தமிழவேள் நற்பணி மன்றம்
28	தமிழ்ப் பட்டிமன்றக் கலைக் கழகம்
29	உமறுப் புலவர் தமிழ் உயர்நிலைப்பள்ளி முன்னாள் மாணவர்கள் சங்கம்
30	ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கம்

TAMILS REPRESENTATIVE COUNCIL

(Registered Society in Singapore)
UEN No: S51SS0010G

Audited Financial Statements for the financial year ended 31 December 2021

AAA ASSURANCE PAC
Public Accountants and
Chartered Accountants
180B Bencoolen Street
#12-05, The Bencoolen
Singapore 189648
Tel: 6392 0021
WhatsApp: 9157 1105
Email: audit@aaapac.com
URL: www.aaapac.com

Table of Contents **Page**

Statement by the Management Committee	2
Independent Auditor's Report	3
Statement of Comprehensive Income	6
Statement of Financial Position	7
Statement of Changes in Funds	8
Statement of Cash Flows	9
Notes to the Financial Statements	10

TAMILS REPRESENTATIVE COUNCIL
STATEMENT BY THE MANAGEMENT COMMITTEE
For the year ended 31 December 2021

We, Pandiyan S/O Vellasami and S Tharmaraj being the President and Honorary Treasurer respectively of **TAMILS REPRESENTATIVE COUNCIL**, do hereby state that in our opinion, the financial statements set out on pages 6 to 29 are properly drawn up so as to present fairly, in all material respects, the state of affairs of the Society as at 31 December 2021 and of the results, changes in funds, and cash flows of the Society for the financial year ended on that date.

Signed on behalf of the Management Committee,

Pandiyan S/O Vellasami
President

S Tharmaraj
Honorary Treasurer

Singapore

19 SEP 2022

AAA ASSURANCE PAC
PUBLIC ACCOUNTANTS
CHARTERED ACCOUNTANTS
180B Bencoolen Street #12-05 The Bencoolen
Singapore 189648
Tel : (65) 6392 0021
WhatsApp : (65) 9157 1105
Email : audit@aaapac.com
Website : www.aaapac.com
Co. Reg. No. 201408818E
GST Reg. No. 201408818E

INDEPENDENT AUDITOR'S REPORT TO THE MEMBERS OF TAMILS REPRESENTATIVE COUNCIL

Report on the Audit of the Financial Statements

Opinion

We have audited the financial statements of **TAMILS REPRESENTATIVE COUNCIL** (the "Society") which comprise the statement of financial position as at 31 December 2021, and the statement of comprehensive income, statement of changes in funds and statement of cash flows for the financial year then ended, and notes to the financial statements, including a summary of significant accounting policies.

In our opinion, the accompanying financial statements are properly drawn up in accordance with the provisions of the Societies Act, Chapter 311 (the Act) and Financial Reporting Standards in Singapore (FRSs) so as to present fairly, in all material respects, the State of affairs of the Society as at 31 December 2021 and the results, changes in funds and cash flows of the Society for the financial year ended on that date.

Basis for Opinion

We conducted our audit in accordance with Singapore Standards on Auditing (SSAs). Our responsibilities under those standards are further described in the Auditor's Responsibilities for the Audit of the Financial Statements section of our report. We are independent of the Society in accordance with the Accounting and Corporate Regulatory Authority (ACRA) Code of Professional Conduct and Ethics for Public Accountants and Accounting Entities (ACRA Code) together with the ethical requirements that are relevant to our audit of the financial statements in Singapore, and we have fulfilled our other ethical responsibilities in accordance with these requirements and the ACRA Code. We believe that the audit evidence we have obtained is sufficient and appropriate to provide a basis for our opinion.

Other Information

Management is responsible for the other information. The other information comprises the Statement by the Management Committee set out on page 2.

Our opinion on the financial statements does not cover the other information and we do not express any form of assurance conclusion thereon.

In connection with our audit of the financial statements, our responsibility is to read the other information and, in doing so, consider whether the other information is materially inconsistent with the financial statements or our knowledge obtained in the audit, or otherwise appears to be materially misstated. If, based on the work we have performed, we conclude that there is a material misstatement of this other information, we are required to report that fact. We have nothing to report in this regard.

-continued

AAA ASSURANCE PAC
PUBLIC ACCOUNTANTS
CHARTERED ACCOUNTANTS
180B Bencoolen Street #12-05 The Bencoolen
Singapore 189648
Tel : (65) 6392 0021
WhatsApp : (65) 9157 1105
Email : audit@aaapac.com
Website : www.aaapac.com
Co. Reg. No. 201408818E
GST Reg. No. 201408818E

Responsibilities of Management and Those Charged with Governance for the Financial Statements

Management is responsible for the preparation of financial statements in accordance with the provisions of the Act and FRSs, and for such internal control as management determine is necessary to enable the preparation of financial statements that are free from material misstatement, whether due to fraud or error.

In preparing the financial statements, management is responsible for assessing the Society's ability to continue as a going concern, disclosing, as applicable, matters related to going concern and using the going concern basis of accounting unless management either intends to liquidate the Society or to cease operations, or has no realistic alternative but to do so.

Those charged with governance are responsible for overseeing the Society's financial reporting process.

Auditor's Responsibilities for the Audit of the Financial Statements

Our objectives are to obtain reasonable assurance about whether the financial statements as a whole are free from material misstatement, whether due to fraud or error, and to issue an auditor's report that includes our opinion. Reasonable assurance is high level of assurance, but is not a guarantee that an audit conducted in accordance with SSAs will always detect a material misstatement when it exists. Misstatements can arise from fraud or error and are considered material if, individually or in the aggregate, they could reasonably be expected to influence the economic decisions of users taken on the basis of these financial statements.

As part of an audit in accordance with SSAs, we exercise professional judgement and maintain professional scepticism throughout the audit. We also:

- Identify and assess the risks of material misstatement of the financial statements, whether due to fraud or error, design and perform audit procedures responsive to those risks, and obtain audit evidence that is sufficient and appropriate to provide a basis for our opinion. The risk of not detecting a material misstatement resulting from fraud is higher than for one resulting from error, as fraud may involve collusion, forgery, intentional omissions, misrepresentations, or the override of internal control.

- Obtain an understanding of internal control relevant to the audit in order to design audit procedures that are appropriate in the circumstances, but not for the purpose of expressing an opinion on the effectiveness of the Society's internal control.

- Evaluate the appropriateness of accounting policies used and the reasonableness of accounting estimates and related disclosures made by management.

-continued

AAA ASSURANCE PAC
PUBLIC ACCOUNTANTS
CHARTERED ACCOUNTANTS
180B Bencoolen Street #12-05 The Bencoolen
Singapore 189648
Tel : (65) 6392 0021
WhatsApp : (65) 9157 1105
Email : audit@aaapac.com
Website : www.aaapac.com
Co. Reg. No. 201408818E
GST Reg. No. 201408818E

Auditor's Responsibilities for the Audit of the Financial Statements - continued

- Conclude on the appropriateness of management's use of the going concern basis of accounting and, based on the audit evidence obtained, whether a material uncertainty exists related to events or conditions that may cast significant doubt on the Society's ability to continue as a going concern. If we conclude that a material uncertainty exists, we are required to draw attention in our auditor's report to the related disclosures in the financial statements or, if such disclosures are inadequate, to modify our opinion. Our conclusions are based on the audit evidence obtained up to the date of our auditor's report. However, future events or conditions may cause the Society to cease to continue as a going concern.

- Evaluate the overall presentation, structure and content of the financial statements, including the disclosures, and whether the financial statements represent the underlying transactions and events in a manner that achieves fair presentation.

We communicate with those charged with governance regarding, among other matters, the planned scope and timing of the audit and significant audit findings, including any significant deficiencies in internal control that we identify during our audit.

Report on Other Legal and Regulatory Requirements

In our opinion, the accounting and other records required by the Societies Regulations enacted under the Societies Act to be kept by the Society have been properly kept in accordance with those Regulations.

AAA Ass. PAC

AAA ASSURANCE PAC
Public Accountants and Chartered Accountants

Singapore
19th September 2022

	Note	2021 $	2020 $
Income resources	4	113,510	129,470
Other income			
Interest income		4,939	3,997
Sundry income		2,020	5,400
	5	6,959	9,397
Less: Expenditure			
Bursary awards expenses		46,407	39,706
Depreciation of plant and equipment	8	1,182	1,474
Depreciation of right of use asset	9	17,540	16,357
Donations and sponsorships		500	4,500
Maanavar muzhakkam expenses		-	981
Sorpor forum expense		39,369	-
Thamizeh chiku buku chiku buku		-	6,989
TRC We Care programme		400	26,180
Youth wing event		2,729	3,192
Other operating expenses	6	27,100	28,471
		(135,227)	(127,850)
Finance cost - interest on lease liabilities		(389)	(531)
(Deficit) / surplus before income tax		**(15,147)**	**10,486**
Income tax expense	7(a)	-	(32)
(Deficit) / surplus for the financial year, representing total comprehensive (loss) / income for the financial year		**(15,147)**	**10,454**

The annexed notes form an integral part of the audited financial statements.

	Note	2021 $	2020 $
Non – current assets			
Plant and equipment	8	2,968	1,288
Right of use asset	9	5,847	23,386
		8,815	24,674
Current assets			
Cash and bank balances		242,259	156,819
Sundry receivables	10	2,000	2,000
Fixed deposits	11	545,711	647,695
		789,970	806,514
Less: Current liabilities			
Sundry payables	12	4,737	4,350
Lease liabilities	13	5,969	17,611
Provision for taxation	7(c)	-	32
		10,706	21,993
Net current assets		779,264	784,521
		788,079	**809,195**
Less: Non - Current liabilities		-	(5,969)
Net assets		**788,079**	**803,226**
Funds			
General fund		788,079	803,226
Total funds		**788,079**	**803,226**

The annexed notes form an integral part of the audited financial statements.

	General Fund	Total
	$	$
Balance as at 31/12/2019	**792,772**	**792,772**
Surplus for the financial year, representing total comprehensive income for the financial year	10,454	10,454
Balance as at 31/12/2020	**803,226**	**803,226**
Deficit for the financial year, representing total comprehensive loss for the financial year	(15,147)	(15,147)
Balance as at 31/12/2021	**788,079**	**788,079**

The annexed notes form an integral part of the audited financial statements.

	2021	2020
	$	$
Cash flows from operating activities		
Surplus / (deficit) before taxation	(15,147)	10,486
Adjustment for:		
Depreciation of plant and equipment	1,182	1,474
Depreciation of right of use asset	17,540	16,356
Rental rebate	(1,720)	(900)
Interest expense on lease liabilities	389	531
Interest income	(4,939)	(3,997)
	(2,695)	23,950
Working capital changes:		
Sundry receivables	-	-
Sundry payables and accruals	387	(1,050)
Cash (used in) / generated from operating activities	(2,308)	22,900
Income tax paid	(32)	-
Net cash (used in) / generated from operating activities	(2,340)	22,900
Cash flows from investing activities		
Purchase of plant and equipment	(2,863)	(1,033)
Fixed deposits	101,984	(303,910)
Net cash generated from / (used in) investing activities	99,121	(304,943)
Cash flows from financing activities		
Interest received	4,939	3,997
Interest expense on lease liabilities	(389)	(531)
Payment of principal portion of lease liabilities	(15,891)	(16,569)
Net cash used in financing activities	(11,341)	(13,103)
Net increase / (decrease) in cash and cash equivalents	85,440	(295,145)
Cash and cash equivalents at beginning of the year	156,819	451,964
Cash and cash equivalents at end of the year	**242,259**	**156,819**

	2021	2020
Comprising:	$	$
Cash at hand	268	268
Cash in bank	241,991	156,551
	242,259	**156,819**

The annexed notes form an integral part of the audited financial statements.

These notes form an integral part of and should be read in conjunction with the Society financial statements:

1. General

TAMILS REPRESENTATIVE COUNCIL (the "Society") is registered under Societies Act and its registered and principal place of operations is at 546A Serangoon Road, Singapore 218168.

The principal activities of the Society are to promote, encourage, enhance, upgrade and improve the performance of the members and the community by organizing social, educational and recreational activities.

2. Summary of significant accounting policies

2.1 Basis of preparation

